**இ.வே.ஆரா.கு – மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்**
**நாக்பூர்**

[பதிநான்காவது வாரம் - வாராந்திர ஆலோசனைகள்- பருத்தி பயிர் சாகுபடி (22-28 ஆகஸ்ட் 2023 )]

[(35 வது நிலையான வாரம்)]

“இங்குதரப்பட்டுள்ள அறிவுரைகள்- அந்தந்த மாநில அரசு வேளாண்மை பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்டவை”

| **தமிழ்நாடு** | | பெய்த மழையளவு –(மி.மீ) | | | | | கணிக்கப்பட்டுள்ள மழையளவு –(மி.மீ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகஸ்ட் | | | | | ஆகஸ்ட் | | | | |
| | | **18** | **19** | **20** | **21** | **22** | **24** | **25** | **26** | **27** | **28** |
|  | பெரம்பலூர் | 0 | 4.4 | 4.4 | 0 | 0 | 4 | 3 | 0 | 2 | 2 |
| | சேலம் | 0 | 0 | 0 | 5 | 3 | 14 | 4 | 1 | 1 | 5 |
| | திருச்சி | | | | | | 8 | 2 | 0 | 2 | 6 |
| | விருதுநகர் | 0 | 0 | 0 | 0 | 0 | 4 | 3 | 0 | 0 | 0 |
| மழையின் அளவு மற்றும் வண்ணக் குறியீடு | | 0.1 to 2.4 மி.மீ | | 2.5 to 15.5 மி.மீ | | 15.6 to 64.4 மி.மீ | | 64.5 to 115.5 மி.மீ | | 115.6 to 204.4 மி.மீ | |
| மழைப்பொழிவு வகை | | மிக லேசான மழை | | லேசான மழை | | மிதமான மழை | | பலத்த மழை | | மிக அதிக மழைப்பொழிவு | |

**பயிர் நிலை:**

கோயம்புத்தூர் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில், பருத்தி நடவு நடைபெறுகிறது. பருத்தி 25 நாட்கள் முதல் 35 நாட்கள் வரை முளைத்துள்ளது. தண்ணீர் கட்டுதல் மற்றும் களையெடுத்தல் நடைபெறுகிறது. அகன்ற இலைகளை உடைய வட்டக்கோரை, பருப்புக்கீரை, வெட்டுக்காயப்பூண்டு போன்ற களைகள் வயல்களில் காணப்படுகின்றன. தத்துப்பூச்சி தாக்குதல் காணப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில், பருத்தி நடவு நடைபெறுகிறது. பருத்தியானது முளைத்து 10 நாட்கள் வரை உள்ளது. அதிகமான பகுதிகளில் வயல்கள் விதைப்புக்கு தயாராவதும் மற்றும் விதைப்பு பணியானது சில பகுதிகளில் முடிவடைந்துள்ளது. களைகள் குறிப்பாக சாரணை, வட்டக்கோரை மற்றும் அருகு முளைத்துள்ளது. பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஏதும் காணப்படவில்லை.

**ஆலோசனைகள்:**

கோயம்புத்தூர் பகுதிகளில், விவசாயிகள் களைகளை எடுத்து, நீர்ப்பாசனம் அளிக்கவும். பருத்தி பயிர்களை சாறு உறுஞ்சும் பூச்சிகளான இலைப்பேன், தத்துப்பூச்சி மற்றும் நோய்களான அடித்தண்டு அழுகல் நோய், இலை நோய்களுக்காக தொடர்ந்து கண்காணித்து வரவும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில், விவசாயிகள் சரியான அளவில் குறிப்பாக 15, 20 மற்றும் 2.5 கிலோ கிராம்/ ஹக்டேருக்கு என ரகங்கள், மானாவாரி மற்றும் வீரிய ரகங்களுக்கு பயன்படுத்தவும். விதைகளுடன் 600 கிராம்

அஸோட்டோபாக்டர் மற்றும் 600 கிராம் பாஸ்போ பாக்டிரியா (அல்லது) 600 கிராம் அஸோபோஸ்/ ஹெக்டேர் என விதை நேர்த்தி செய்யவும். விதைக்கும் முன் தேர்வு செய்யப்பட்ட இடைவெளியில் 75×30செ.மீ, 45×15செ.மீ மற்றும் 120 (அல்லது) 90×60செ.மீ என சீரான இடைவெளியிலும் மேலும் மண்பரிசோதனை செய்த பின் உரமிடுதல் (அல்லது) வழக்கமான முறையில் உரங்களை 80:40:40, 40:20:20, 120:60:60 கிலோ கிராம்/ என்பிகே/ஹெக்டேர் என முறையே ரகங்கள், மானாவாரி மற்றும் வீரிய ரகங்களுக்கு பயன்படுத்தவும்.

**தமிழ் மொழிபெயர்ப்பு: முனைவர். அ. மணிகண்டன், முனைவர். ம. சரவணன்**